# இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி - 2012

## 1. நிதிச் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 ஆழுத்திக்கூறுவதற்கான விடயங்கள்

வங்கியின் மொத்த வாடிக்கையாளர் வைப்புக்களில், முன்னைய ஆண்டின் 47.08 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 47.29 சதவீதத்திற்கும் அதிகமானவை 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருபது வாடிக்கையாளர்களிற்கு உடமையானது. இது வங்கியானது மிகவும் வரையறுத்த வாடிக்கையாளர்களில் அதிகளவு தங்கியிருப்பதனையும் அதிகூடிய திரவத்தன்மை ஆபத்தினையும் வெளிப்படுத்துகின்றது. எனினும், இந்த நிலைமை வங்கியின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை பாதகமாக பாதிக்குமென அவதானிக்கப்பட்டது.

#### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எல்கேஏஎஸ் 19 இன்படி (ஊழியர் நலன்கள்) வங்கியானது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிக்கொடை ஏற்பாட்டிற்கான நியாயமான பெறுமதியை நிர்ணயிப்பதற்கு இளைப்பாற்று கணிப்பு மதிப்பீட்டினைச் செய்திருக்கவில்லை.

(ஆ) எல்கேஏஎஸ் 19 இற்கு முரணாக (ஊழியர் நலன்கள்) வங்கியானது விவரித்த நலத் திட்டத்தின் கீழ் கடப்பாட்டை நிறைவேற்றும் வகையில் திட்டமிட்ட சொத்துக்களை பேணியிருக்கவில்லை. (நிதி அல்லது தகைமையுள்ள காப்புறுதிக் கொள்கை).

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒரு வீடமைப்பு செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த நட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடனிற்காக ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை ஏல விற்பனை செய்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும் வங்கியானது மீளாய்வாண்டிற்காக நியாயமான பெறுமதி மாதிரியின் கீழ் இந்த ஆதனத்தின் எதிர்கால காசு உட்பாய்ச்சலை இனங்கண்டு கணக்கிடப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறுள்ளன.

| கடன் இல. | வழங்கப்பட்ட தொகை ரூபா | சபைப் பத்திர திகதி |
|---|---|---|
| பி 020000001 | 10,000,000 | 2012/06/08 |

### 1.2.4 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

மீள்நிதி கடன் மீதிகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதுப்பேரேட்டில் காட்டப்பட்ட மீதிக்கும் மூன்றாம் தரப்பினரால் அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தில்களிற்கும் இடையில் பின்வரும் வித்தியாசங்கள் இனங்காணப்பட்டிருந்தன.

| விபரம் | பொதுப் பேரேட்டின்படி மீதி | மூன்றாம் தரப்பினர் உறுதிப்படுத்தலின்படி மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஐக்கிய அரசு உதவி (யூஎஸ்ஏஐடி) | 26,986,311 | 22,517,903 | 4,468,408 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி II (ஏடிபீ II) | 85,676,993 | 44,965,266 | 40,711,727 |
| சலுகை வீடமைப்பு நிதி திட்டம் (ஏஎச்எவ்) | 739,848,788 | 739,809,088 | 39,700 |

### 1.2.5 இனங்காணப்படாத வைப்புக்கள்

பொதுப் பேரேட்டின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத வைப்புக்கள் ரூபா 3,181,292 தொகையாக இருந்தது இதில் 99.5 சதவீதமானவை இரண்டு ஆண்டுகளிற்கு மேட்பட்டவையாகும்.

| வயது (ஆண்டுகள்) | எண்ணிக்கைகள் | தொகை ரூபா | சதவீதம் |
|---|---|---|---|
| 01-02 | 4 | 15,965 | 0.50 |
| 02-05 | 115 | 335,920 | 10.56 |
| 05-10 | 1023 | 2,104,838 | 66.16 |
| 10 ஆண்டுகளிற்கு மேல் | 319 | 724,568 | 22.78 |
| **மொத்தம்** | **1461** | **3,181,291** | **100** |

### 1.2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

வங்கியில் வட்டி சேகரிக்கின்ற வேளையில் காசு அடிப்படையில் சேகரிக்கப்படுமாயிருந்தால் செயற்பாடற்ற கடன் வருமானமாக வகைப்படுத்தப்பட்ட ஒரு கணக்கின் மீதான வட்டியினை வங்கியானது பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், வங்கியானது வங்கியியல் அதிகாரச் சட்டம், பணிப்பு இலக்கம் 4 இன் 2008 5(1) ஆம் பிரிவின் பிரகாரம், காசு அடிப்படைக்குப் பதிலாக அட்டுறு அடிப்படையில் செலுத்தத்தவறிய ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் மீதன தண்டப்பண வட்டி வருமானம் கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.2.7 சர்சசைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உத்தியோகத்தர் மிகையூதியம்

வங்கியானது மீளாய்வாண்டிற்காக வங்கி ஊழியர்களிற்கு உத்தியோகத்தர் மிகையூதியத்தை செலுத்தியிருக்கவில்லை. பதிலாக வங்கியானது 2012 திசெம்பர் 4 ஆந்திகதிய எஸ்சீஎல்/2012/16 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி விசேட உத்தியோகத்தர் கடன் வசதியின வழங்கியிருந்ததுடன் அந்நோக்கத்திற்காக ரூபா 22,201,113 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 19,748,946 ஆக மதிப்பிடக்கூடிய மீளாய்வாண்டிற்கான நட்டத்தை தவிர்ப்பதற்கு ‘‘உத்தியோகத்தர் விசேட கடனின்’’ கீழ் சொத்தாக கணக்கிடப்பட்டிருந்தது. முகாமையானது 06 மாத சலுகைக் காலத்துடன் அந்த வட்டியில்லாக் கடன்களை வழங்குவதற்கு தீர்மானித்தது என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும், வங்கியானது குறைந்த இலாபத்தன்மை நிலையில் நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்தியிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) முதலீட்டு ஆதனம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) எல்கேஏஎஸ் 40 இன் 33 ஆம் பந்தியின்படி முதலீட்டு ஆதனம்'' ஒரு நிறுவனம் அதன் ஆதனங்களை அளவீடு செய்வதற்கு நியாயப் பெறுமதி மாதிரியினைத் தெரிவு செய்யுமாயிருந்தால் அதனது அனைத்து மதிப்பீட்டு ஆதனங்களும் நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்பட வேண்டும். இதன்படி வங்கியானது ரூபா 207,000,000 இற்காக காணியொன்றை பெறுமதியிட்டிருந்ததுடன் ரூபா 53,081,000 ஆன மீள்மதிப்பு மிகையை பெற்றிருந்தது. எவ்வாறாயினும், ஏனைய மூன்று முதலீட்டு ஆதனங்கள் நியாயமான பெறுமதியில் பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை.

(ii) முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்ட அவிசாவளை வீடமைப்புச் செயற்திட்டத்தின் பெறுமதி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் ரூபா 179,310,709 ஆக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், காணியின் பெறுமதி ரூபா 175,211,200 மாத்திரமாக இருந்தது. ஆகவே, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதியின் உண்மைத்தன்மை ஐயத்திற்கிடமாக உள்ளது.

(iii) அவிசாவளை வீடமைப்பு செயற்திட்டத்தில் ரூபா 5,630,000 இல் விற்கப்பட்டிருந்த மூன்று வீடுகள் தொடர்பில் வாங்கியோரிடமிருந்து சேகரிப்பதற்குப் பதிலாக வங்கியால் ரூபா 498,429 தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது.

(இ) விசேட பணிப்கொடை

கூட்டு உடன்படிக்கையின்படி, வங்கியானது சாதாரண பணிக்கொடைக்கு 15 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சேவையாற்றிய 2007 ஆம் ஆண்டிலிருந்து வழமையான பணிக்கொடைக்கு மேலதிகமாக ஊழியர்களிற்கு விசேட பணிக்கொடைக் கொடுப்பனவொன்றை வழங்கியிருந்தது. வங்கி 2007 இலிருந்து இந்த விசேட பணிக்கொடை தொடர்பில் கணக்குகளில் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொண்டிருக்காதுடன் மீளாய்வாண்டு வரை கொடுப்பனவுகளை காசு அடிப்படையில் செய்திருந்ததென அவதானிக்கப்பட்டது. 2011 யூன் 09 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின்படி, முகாமையானது விசேட பணிக்கொடைக்கான ஏற்பாடு செய்தலின் அவசியத்தை அறிந்துகொண்டிருந்தது, ஆனால் வங்கியின் இலாபத்தன்மையை பாதிக்கும் விடயங்கள் காரணமாக அவ்வாறு செய்வதிலிருந்து தவிர்த்திருந்தது.

(ஈ) மோசடியான ஆவணங்கள் ஊடாக வங்கியால் வழங்கபட்ட ரூபா 1.8 மில்லியன் தொகையான கடன் செயற்பாடற்ற கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் வங்கியியல் உதவியாளர் அவருடைய சொந்தப் பணம் ஒரு ரூபாவை (ரூபா 1) வைப்பிலிடுவதன் மூலம் கடன் கணக்கை மூடியிருந்தாரென்பது அவதானிக்கப்பட்டது. வங்கித் தலைவரின் கருத்துப்படி, இந்த விடயம் தொடரபாக புலனாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

(உ) வங்கியானது நிதி கொடுக்கல் வாங்கல்களை பாதிக்காமல் தனியார் நிறுவனத்தின் ஊடாக ஊழியர் பங்கு விருப்பத்தெரிவுத் திட்டத்தின் கீழ் (ஈஎஸ்ஓபி) ரூபா 49,842,936 ஆல் பங்கு மூலதனம் மற்றும் ஏனைய சொத்துக்களை அதிகரித்திருந்தது. இது ஏனைய சொத்துக்களாக தனியார் நிறுவனத்தின் பெயரில் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) சாதாரண வட்டி வீதங்களிற்கு முரணாக, வங்கியானது ரூபா 450 மில்லியன் நிலையான வைப்பொன்றிற்காக இலங்கை மின்சார சபைக்கு 22.1 சதவீதம் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது. இங்கு முதிர்வு திகதியளவில் வட்டி ரூபா 69,391,353 ஆக இருக்கலாம். உத்தியோகத்தர்களால் செய்யப்பட்ட ஆவணத் தவறாக இருந்தது. சபைப் பணிப்பாளர்கள் சரியான நிலைமையை அறியாமல் அங்கீகாரமும் வழங்கியிருந்தனரென வங்கி குறிப்பிட்டிருந்தது.

### 1.2.8 இருப்புக்கள் மெய்மையாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு பொதுப்ரேட்டு மீதிக்கும் பௌதீக மெய்மையாய்வு மீதிக்கும் இடையில் இனங்காணப்பட்ட ரூபா 7,576,128 தொகையான வித்தியாசங்கள் இனங்காணப்படாமல் அச்சிடல் மற்றும் காகிதாதி செலவினங்களாக வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ii) இருப்பு இணக்கக் கூற்றின்படி ரூபா 1,533,284 பெறுமதியான இனங்காணப்படாத இருப்பு இனங்காணப்படாமல் அச்சிடல் மற்றும் காகிதாதி செலவினங்களிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(iii) இருப்பு வித்தியாசங்களிற்கு காரணமாகவிருந்த 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பரிசுபொருள் விடயங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 1,065,150 ஆன தீர்க்கப்படாத முற்பணம் உரிய கடன்கொடுத்தோர் கணக்கிற்குச் செவு வைக்கப்படாது அட்சிடல் மற்றும் காகிதாதி செலவின கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததால் அதே தொகையால் இலாபம் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

**1.2.9 கடன்கள் மற்றும் முற்பணங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்) நிலைமை

வங்கியானது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 20.20 சதவீதத்தில் செயற்பாடற்ற கடன்கள் விகிதத்தை பதிவு செய்திருந்த அதேநேரம் வங்கியியல் துறையில் சராசரி செயற்பாடற்ற கடன்கள் விகிதம் 06 சதவீதத்தை விட குறைவாக இருந்தன.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதிரான கடன்கள் (ஈபிஎவ்)

ரூபா 4.2 மில்லியன் தொகையான திருப்பிச்செலுத்தத்தவறிய ஊழியர் சேமலாப நிதியக் கடன்களின் 92 கோரிக்கைகள் பல்வேறு காரணங்களால் இலங்கை மத்திய வங்கியால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் 2012 மார்ச் 20 இல் வங்கிக்கு அறிவித்திருந்தது. எவ்வாறாயினும் வங்கியானது 2013 சனவரி 31 வரை அந்த கோரிக்கைகளை திரும்ப சமர்ப்பிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான அந்த நிலுவையாகவிருக்கின்ற கடன்களிற்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் செயற்பாடுகள் விளைவித்திருந்த வரிக்கு முந்திய தேறிய இலாபம் ரூபா 2.5 மில்லியனை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபமான ரூபா 216 மில்லியனுடன் ஒப்பிடுகையில் தேறிய இலாபத்தில் ரூபா 213.5 மில்லியன் அல்லது 99 சதவீதத்தல் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2012 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட பாதீட்டின்படி மதிப்பிடப்பட்ட தேறிய இலாபம் ரூபா 147 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நேரொத்த உள்ளபடியான தேறிய இலாபத்துடன் ஒப்பிடப்படும் போது 98 சதவீதத்தால் தேறிய இலாபத்தில் குறைவினைச் சுட்டிக்காட்டுகிறது.

## 2.2 செயற்பாட்டு விளைவுகளின் பொழிப்பு

2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதிசார் விளைவுகளின் பொழிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| **விடயம்** | **2012** | **2011** |
|---|---|---|
| | ரூபா ‘000 | ரூபா ’000 |
| வட்டி வருமானம் | 2,634,758 | 2,260,966 |
| வட்டிச் செலவினம் | (1,805,320) | (1,354,294) |
| **தேறிய வட்டி வருமானம்** | **829,438** | **906,672** |
| வட்டியல்லா வருமானம் | 58,458 | 83,664 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறியது) | (1,820) | 40,972 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **886,076** | **1,031,308** |
| பதவியினர் கிரயம் | (458,115) | (360,797) |
| வேறு செலவினம் | (303,799) | (258,787) |
| கடன் மற்றும் வேறு நட்டங்களிற்கான இழப்பீட்டுக் கட்டணம் | (1,496) | (10,063) |
| **பெறுமதிசேர் வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **122,666** | **401,661** |
| பெறுமதி சேர் வரி | (49,893) | (81,005) |
| வரிச் செலவினம் | (70,321) | (104,637) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **2,452** | **216,019** |

வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினம் முறையே 17 சதவீதம் மற்றும் 33 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், வட்டியல்லாச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 21.24 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஆளணிக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடும் போது 27 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.3 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கிரயம் மற்றும் பெறுபேறு

| விபரம் | திரண்ட கிரயம் மற்றும் வருமான அடிப்படையில் | | |
|---|---|---|---|
| | **சராசரி மீதி** ரூபா.'000 | **கிரயம்/ வருமானம்** ரூபா.'000 | **வீதம்** (%) |
| **வைப்புக்கள்** | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 1,585,683 | 89,705 | 5.66 |
| நிலையான வைப்புக்கள் | 7,794,636 | 1,107,473 | 14.21 |
| தனனீடன | 2,145,715 | 363,917 | 16.96 |
| ஏனைய வைப்புக்கள் | 20,425 | 37 | 0.18 |
| **வைப்புக்களின் உப மொத்தம்** | **11,546,458** | **1,561,131** | **13.52** |
| **கடன்பெறல்** | | | |
| வர்த்தக கடன்பெறல்கள் | | | |
| வங்கி மேலதிகப்பற்று | 51,352 | 2,624 | 5.11 |
| சந்தையிலிருந்து கடன்பெறல் | 816,448 | 137,233 | 16.81 |
| **வர்த்தக கடன் பெறலின் உப மொத்தம்** | **867,801** | **139,856** | **16.12** |
| **வேறு கடன்பெறல்கள்** | | | |
| விசேட திட்டக் கடன்கள் | 1,053,931 | 39,483 | 3.75 |
| மீள்நிதியிடப்பட்ட கடன்கள் | 1,318,696 | 64,812 | 4.91 |
| வேறு கடன்பெறல்கள் | 1,499 | 61 | 4.08 |
| **வேறு கடன் பெறலின் உப மொத்தம்** | **2,374,126** | **104,356** | **4.40** |
| **மொத்த நிதிக் கிரயம்** | **14,788,385** | **1,805,344** | **12.21** |
| வேறு பொறுப்புக்கள் | 1,280,025 | - | - |
| மூலதனம் | 962,093 | - | - |
| ஒதுக்கங்கள் | 1,454,249 | - | - |
| | **18,484,753** | **-** | **-** |

| | | | |
|---|---|---|---|
| **கழி:** | | | |
| வேறு சொத்துக்கள் | 1,052,808 | - | - |
| நிதிக் கிரயம் | **17,431,945** | **1,805,344** | **10.36** |
| மேந்தலைக் கிரயம் | 17,431,945 | 768,298 | 4.41 |
| **மொத்த நிதிக் கிரயம்** | **17,431,945** | **2,573,642** | 14.76 |
| | | | |
| கடன் பிரிவு | 14,846,850 | 2,278,680 | 15.35 |
| முதலீடுகள் | 2,585,095 | 356,737 | 13.80 |
| **நிதிசார் பெறுபேறு - செயலாற்றல்** | **17,431,945** | **2,635,417** | **15.12** |
| | | | |
| வருமான எல்லை | 17,431,945 | 61,775 | 0.35 |
| கட்டற்ற அடிப்படை வேறு வருமானம் | 17,431,945 | 58,083 | 0.33 |
| **வருமான எல்லை** | **17,431,945** | **119,858** | **0.69** |
| வரி | 17,431,945 | 85,787 | 0.49 |
| **தேறிய வருமான எல்லை** | **17,431,945** | **34,070** | **0.20** |

## 2.4. குறிப்பிடத்தக்க விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்கான வங்கியின் சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| **குறிகாட்டி** | **2012 %** | **2011 %** |
|---|---|---|
| **இலாபத்தன்மை** | | |
| (i) தேறிய இலாப விகிதம் | 0.07 | 9.05 |
| (ii) தேறிய வட்டி வருமானம்/ வட்டி வருமானம் | 31.48 | 40.10 |
| (iii) வட்டி வருமானத்திற்கு வட்டிக் கிரயம் | 68.52 | 59.90 |
| (iv) தேறிய வட்டி வருமானத்திற்கு மேந்தலைச் செலவினம் | 91.92 | 68.36 |
| (v) சராசரிச் சொத்துக்கள் மீதான வருவாய் | 0.01 | 1.22 |
| (vi) உரிமை மூலதனம் மீதான வருவாய் | 0.10 | 10.32 |
| (vii) ஒரு பங்கிற்கான உழைப்பு (ரூபா) | 0.04 | 3.34 |

| | | |
|---|---|---|
| **மூலதனம் போதியளவாயிருத்தல் விகிதம்** | | |
| (i) உரிமை மூலதனம் : மொத்தச் சொத்துக்கள் | 11.50 | 11.73 |
| (ii) உரிமை மூலதனம் : கடன்பெறல்கள் | 74.98 | 65.71 |
| (iii) தட்டு I | 20.79 | 21.34 |
| (iv) தட்டு II | 21.46 | 21.95 |
| திரவச் சொத்து விகிதம் | | |
| திரவச் சொத்து விகிதம் (ஆகக் குறைந்தது 20 சதவீதம்) | 22.65 | 21.15 |

**2.5 வங்கியின் முதிர்வு ஒப்பீட்டளவு**

மாதாந்த மட்டத்தில் வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒப்பீட்டளவுப் பகுப்பாய்வானது மொத்தப் பொறுப்புக்கள் மிகையாகவிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 3 மாதங்கள் மற்றும் 3-12 மாதங்கள் வரையான குறுகியகால திரவ இடைவெளிகளில் முறையே ரூபா 5,095 மில்லியன் மற்றும் ரூபா 4,142 மில்லியன் என்பனவாக இருந்ததென்பதை வெளிப்படுத்தியது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| | **0-3 மாதங்கள்** | **3-12 மாதங்கள்** | **1-3 ஆண்டுகள்** | **3-5 ஆண்டுகள்** | **5 ஆண்டு களிற்கு மேல்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** |
| காசு | 107.86 | - | - | - | - | 107.86 |
| வங்கிகளிடமிருந்து பெறவேண்டியவை | 93.52 | - | - | - | - | 93.52 |
| முதலீடுகள் | 1,878.71 | 1,406.34 | 79.25 | 79.25 | 34.02 | 3,477.57 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 853.97 | 1,121.45 | 3,464.18 | 3,024.57 | 7,501.50 | 15,965.67 |
| நிலையான சொத்துக்கள் | - | - | - | - | 288.12 | 288.12 |
| ஏனைய சொத்துக்கள் | 24.78 | 60.67 | 9.60 | 6.62 | 766.20 | 867.87 |
| **மொத்த சொத்துக்கள்** | **2,958.84** | **2,588.46** | **3,553.03** | **3,110.44** | **8,589.84** | **20,800.61** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மொத்த மூலதன நிதி | - | - | - | - | 2,391.21 | 2,391.21 |
| வைப்புக்கள் | 6,296.29 | 5,887.24 | 209.73 | 88.78 | 440.87 | 12,922.91 |
| கடன் பெறல் | 202.57 | 373.36 | 891.24 | 745.80 | 976.33 | 3,189.30 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனைய பொறுப்புக்கள் | 1,555.61 | 470.31 | 59.77 | 22.85 | 188.65 | 2,297.19 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **8,054.47** | **6,730.91** | **1,160.74** | **857.43** | **3,997.06** | **20,800.61** |
| **முதிர்வு இடைவெளி** | **(5,095.63)** | **(4,142.45)** | **2,392.29** | **2,253.01** | **4,592.78** | **இல்லை** |

## 2.6 செயற்திட்டங்களிலுள்ள தாமதம்

வங்கியானது 2012 ஆம் ஆண்டிற்கான அதனுடைய செயலநடவடிக்கைத் திட்டத்தின்படி இருக்கின்ற காலாவதியான எச்ஆர் மற்றும் சம்பளப்பட்டியல் பொதியினை பிரதியீடு செய்வதற்கு பொருத்தமான மென்பொருள் பொதியினைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பாரத்திருந்தது. கேள்விக் குழு தனியார் கம்பனியிடமிருந்து மென்பொருள் பொதியை கொள்வனவு செய்வதற்கு சிபார்சு செய்திருந்ததுடன் 2012 யூன் 14 இல் 50 % முற்பணமாக ரூபா 1,380,000 தொகையைச் செலுத்தியிருந்தது. இக் கம்பனியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி, மீளாய்வாண்டின் போது 17 நடவவடிக்கைகள் பூர்தியாக்கவேண்டியிருந்தது. ஐரீ முகாமையாளரின் 2013 பெப்ரவரி 27 ஆந் திகதிய கடிதத்தின்படி, வங்கியானது பதவியணியினரின் வருகையின் அறிக்கையிடல் மற்றும் பதவியணியினர்களின் தனிப்பட்ட கோவைகள் பேணல் மாத்திரமே அமுப்படுத்தியிருந்தது.

## 2.7 வங்கியின் செயலாற்றல்

(அ) வைப்புக்கள்

2012 இன் திருத்திய பாதீட்டின்படி வங்கியானது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 14,262 மில்லியனிற்கு அவர்களுரடய வைப்பு அடிப்படையை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்திருந்தது. எவ்வாறாயினும், அத்திகதியில் உள்ளபடியான மொத்த வைப்புக்கள் ரூபா 12,923 மில்லியன் மாத்திரமேயாகும்.

(ஆ) கடன் தொகுதி

2011- 2013 இற்கான கூட்டிணைந்த திட்டத்தின்படி, வங்கியானது 2012 இன் இறுதியிளவில் ரூபா 21,000 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்ததுடன் 2012 இன் திருத்திய பாதீட்டின்படி கடன்களின் பெறுமதி ரூபா 17,364 மில்லியன் பெறுமதியான கடன்கள வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்தது. எவ்வாறாயினும், வங்கியானது மீளாய்வாண்டு இறுதியளவில் மொத்தக் கடன்களில் ரூபா 15,966 மில்லியனை மாத்திரமே வழங்கியிருந்தது.

(இ) நிதி முதலீடு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் நிதி முதலீடுகள் முன்னைய ஆண்டின் நேரொத்த ரூபா 3,347 மில்லியன் தொகையுடன் ஒப்பிடும் போது ரூபா 2,288 மில்லியனாக இருந்தது. ஆதலால், ரூபா 1,059 மில்லியன் அல்லது 31.64 சதவீதம் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

(ஈ) கிளைச் செயலாற்றல்

வழமையாக, வங்கியானது நாடு முழுவதும் 32 கிளைகளை அமைந்திருந்த போதிலும் கிளை வாரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, கிளைச் செயலாற்றலை முறைப்படி பரீட்சிப்பது சாத்தியமற்றிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட என்னுடைய விரிவான அறிக்கை மூலம் வங்கியின் பொது முகாமையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பொருளிருப்புப் பதிவேடுகள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்

(ஆ) கடன் நிர்வாகம்

(இ) சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனை

(ஈ) விடுமுறைப் பதிவேடுகளின் பேணுகை

(உ) முதலீட்டு நிதி

(ஊ) நிலையான வைப்புக்கள்

(எ) மென்பொருள் பொதிகள்